**தலைப்பு 267 – முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியான அபிப்பிராயம்

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கிய பொழிப்பு அறிக்கை 2019 மே 29 இல் கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு வழங்கப்பட்டிருந்தது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 அக்டோபர் 10 இல் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1) (இ) பிரிவின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என மதிப்பிடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு நான் தெரியப்படுத்தியிருந்தேன்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் தொகைகளுடன் ஒப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எனினும் கணக்காய்வுக்கு முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் உரிய முறையில் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே முன்னைய ஆண்டிற்குரிய தொகைகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதுள்ளன.

(ஆ) முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடொன்று இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 1.47 மில்லியன் பெறுமதியான 15 கொடுக்கல் வாங்கல்களுக்கு மதிப்பீடுகள், தேவைப்பட்டியல்கள் தினவரவுப் பிரதிகள், பற்றுச்சீட்டுக்கள் மற்றும் தொடர்புடைய கோவை என்பவை சமர்ப்பிக்கப்பட்டிராமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக ஏற்று பரிசீலிக்க முடியாதிருந்தது. | நிதிப்பிரமாணம் 138 இன் பிரகாரம் கொடுக்கல் வாங்கல்களை சான்றுப்படுத்துவதற்கு தேவையான சான்றாதாரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

## 1.6.2 வைப்புக்கள் கொடுப்பனவு மற்றும் மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மற்றும் ஏனைய நான்கு பிரதேச செயலகங்களின் மீளாய்வாண்டிற்கான பொது வைப்புக் கணக்குகளில் கூட்டுமொத்தம் ரூபா 9.45 மில்லியன் பெறுமதியான குறித்த நோக்கங்களுக்கான 66 வைப்புக்கள், 113 பிடிபண வைப்புக்கள் மற்றும் 12 பிணைப்பண வைப்புக்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராது கடந்த 3 மாதம் தொடக்கம் 7 ஆண்டுகள் வரை தேக்கி வைக்கப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

## 1.6.3 முற்பணக் கணக்குகள் மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பதவி வறிதாக்கப்பட்ட, சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்த 10 அலுவலர்களின் பதவியினர் கடன் நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 278,621 இனை தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 4 இன் பிரகாரம் அறவிட்டுக்கொள்வதற்கு கடந்த 03 தொடக்கம் 25 ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 4 இன் பிரகாரம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

## 1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டது. விபரம் வருமாறு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| | ------------------------- | ---------------------- | -------------------------- |
| | பதிவேட்டு வகை<br>---------------------------- | | |
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு<br>---------------------------------------------------- | | |
| | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502(2)இன் பிரகாரம் அதன் 11 ஆம் பின்னிணைப்பின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502(2) இன் பிரகாரம் அதன் 11 ஆம் பின்னிணைப்பின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடானது உரியமுறையில் முறையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கப்பாட்டுடன் பேணப்பட வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன |
| (ii) | கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு<br>-------------------------------------------- | | |
| | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன |
| (iii) | நட்டங்கள் தொடர்பான பதிவேடு<br>---------------------------------------------------- | | |
| | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளுக்கமையவும் அதில் குறிப்பிடப்பட்ட மாதிரிக்கமையவும் நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன |
| (iv) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு<br>---------------------------------------------------- | | |
| | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்களை நாளாந்தம் பரிசீலனை செய்யக்கூடிய முறையில் | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேட்டில் பொறுப்புக்கள் பதிவு செய்யப்பட வேண்டும். | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (v) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு<br>--------------------------------------------------- | | |
| | நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணம் 454(2) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசாங்க கட்டிடங்களிலுள்ள அனைத்து மின்சார உபகரணங்களிற்கும் பொருட் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (vi) | உத்தியோகபூர்வ தொலைபேசிப் பதிவேடு<br>--------------------------------------------------- | | |
| | நிதிப்பிரமாணம் 845(1) இன் பிரகாரம் உத்தியோகபூர்வ தொலைபேசிப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணம் 845(1) இன் 26 ஆம் பிரிவின் பிரகாரம் உத்தியோகபூர்வ தொலைபேசிப் பதிவேடு பேணப்பட வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (vii) | பிணைகள் பதிவேடு<br>-------------------------------- | | |
| | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்கும் விதத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைகள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (viii) | பெறுகைகள் குழுவின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுக்களின் வருகைப் பதிவேடு<br>--------------------------------------------------- | | |
| | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டிக்கமைய குழுவின் செயலாளரால் வருகைப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டிக்கமைய குழுவின் செயலாளரால் வருகைப் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (ix) | கேள்வி கோரல் பதிவேடு<br>------------------------------------------- | | |
| | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டிக்கமைய | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டிக்கமைய | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் |

| | | |
|---|---|---|
| குழுவின் செயலாளரால் கேள்வி கோரல் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை | குழுவின் செயலாளரால் கேள்வி கோரல் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன |

**2 நிதி மீளாய்வு**

**2.1 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| **(அ) மீண்டெழும்செலவினம்** | | |
| மீளாய்வாண்டில் மூன்று பிரதேச செயலகங்களுக்கு மீண்டெழும் செலவினத்திற்காக 12 செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 06 தொடக்கம் 88 சதவீதம் வீச்சிலான சேமிப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 108.92 மில்லியன் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளன. | நிதி ஒதுக்கீடுகளினை வினைத்திறனான வகையில் உபயோகிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| **(ஆ) மூலதனச் செலவினம்** | | |
| மீளாய்வாண்டில் மூன்று பிரதேச செயலகங்களுக்கு மூலதனச் செலவினங்களிற்காக 08 செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 08 தொடக்கம் 100 சதவீதம் வீச்சிலான சேமிப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 58.38 மில்லியன் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளன. | நிதி ஒதுக்கீடுகளினை வினைத்திறனான வகையில் உபயோகிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

**2.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய | நடவடிக்கைகள் எதிர்காலத்தில் |

| | | |
|---|---|---|
| பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>இது தொடர்பாக பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக இலகுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் செய்த மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வுத் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதாக கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படடிருக்கவில்லை. | கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | மேற்கொள்ளப்படும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | | |
| | | ரூபா மில்லியன் | | | |
| (அ) | இலங்கை சனநாய சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் இலக்கம் 396 | 1.45 | கடந்த 01 தொடக்கம் 06 மாதங்களாக வங்கிக்கு கொடுப்பனவுக்குச் | காசோலைகள் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்க நடவடிக்கைகள் | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | சமர்ப்பிக்கப்பட்டிராத காசோலைகள் தொடர்பில் இரு பிரதேச செயலகங்களினால் நாளதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்படுதல் வேண்டும். | கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | அரச நிர்வாகச் சுற்றறிக்கை | | | | |
| | 30 ஆகஸ்ட் 1988 ஆம் திகதிய 29/88 ஆம் இலக்கம் | 3.38 | பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் சம்மதம் பெறப்பட்டிருக்காது 58 அலுவலர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த இருவருடக் கடன்கள் நிலுவையாக தொடர்ந்தும் காணப்படுகின்றது. | பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் சம்மதம் பெறப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (இ) | 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டி நெறிகள் | | | | |
| | (i) பிரிவு 3.9.1 | 10.34 | இரு கமக்காரர் அமைப்புக்கள் மற்றும் 03 கிராம அபிவிருத்திச் சங்கங்கள் என்பவற்றுக்கு தலா ரூபா 2 மில்லியனுக்கு மேற்பட்டதான 05 வீதி புனரமைப்பு வேலைகளை பத்து ஒப்பந்தங்களாக வகுத்து தலா ஒவ்வொரு மாத இடைவெளியில் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அத்தகைய சமுதாய மட்ட அமைப்புக்களினது ஒப்பந்த வேலைகளுக்கான தகைமைகளினை உறுதிப்படுத்தக்கூடிய பதிவேடொன்றும் பேணப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டி நெறியின் பிரிவு 3.9.1 இன் பிரகாரம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | பிரிவு 2.11.3 | மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட மாதிரிகளுக்கு அமைந்திராத வகையில் கேள்வி திறத்தல் கூட்டக்குறிப்பு, தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் கூட்டக்குறிப்பு மற்றும் பெறுகைக்குழு தீர்மான குறிப்புக்கள் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டி நெறியின் பிரிவு 2.11.3 இன் பிரகாரம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

**2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் துணுக்காய் பிரதேச செயலகத்தினால் கூட்டுமொத்தம் ரூபா 58,922 பெறுமதியான இரு கொடுக்கல் வாங்கல்கள் நிதிப்பிரமாணம் 136 இன் பிரகாரம் அனுமதி பெறப்படாது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 136 இற்கமைவாக அனுமதிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு மட்டுமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | மீளாய்வாண்டில் துணுக்காய் மற்றும் ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலகங்களினால் கூட்டுமொத்தம் ரூபா 130,229 பெறுமதியான ஏழு கொடுப்பனவுகள் நிதிப்பிரமாணம் 138 இன் பிரகாரம் அத்தாட்சிப்படுத்தப்பட்டிராது மேற்கொள்ளப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 138 இன் பிரகாரம் கொடுப்பனவுகளினை அத்தாட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 பணி செயற்பாடுகள் நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களினால் மாதாந்தம் மீளாய்வுக்குட்படுத்தாமை, நிறைவேற்ற முடியாது போயிருந்த செயற்திட்டங்களுக்கான காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இச்சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டமானது மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

#### 3.1.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 12 வகையான செயற்திட்டங்கள் மூலம் நிதியளிப்பு செய்யப்பட்டு மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், துணுக்காய் மற்றும் கரைதுறைபற்று பிரதேச செயலகங்களினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 183.9 மில்லியன் பெறுமதியான பொதுமக்களுக்கான 118 வீடமைப்பு செயற்திட்டங்கள் கடந்த 02 தொடக்கம் 06 ஆண்டுகளாக பயன்பாடின்றி காணப்பட்டன. | வீடமைப்பு திட்டங்களினை மறுபரிசீலனைக்குட்படுத்தி பயன்மிக்க வகையில் உபயோகப்படுத்தலை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | தேசிய சிறுவர் பாதுப்பு அதிகார சபையிடமிருந்து பெறப்பட்ட நிதியிலிருந்து ரூபா 24.19 மில்லியன் மொத்தக் | பயன்மிக்க வகையில் உபயோகப்படுத்தலை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஆக்கபூர்வமான | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| கிரயத்தில் மாவட்டச் செயலகத்தால் முல்லைத்தீவு செல்வபுரத்தில் பாதுகாப்பற்ற மற்றும் துஸ்பிரயோகத்திற்குட்பட்ட சிறுவர்களிற்கான பாதுகாப்பு நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டு 2014 திசெம்பர் 26 இல் மாவட்டச் செயலாளரிற்கு 481 இருப்புப் பொருட்கள் மற்றும் பொருத்துக்களுடன் கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கடந்த 04 ஆண்டுகளிற்கு மேலாக இந் நிலையத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெறப்படாதிருந்ததுடன் சாத்தியவள அறிக்கை, பாதுகாப்பற்ற மற்றும் துஸ்பிரயோகத்திற்குட்பட்ட சிறுவர்களின் விபரம் மற்றும் நிலையத்தினை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்காக நடவடிக்கைகள் என்பன நாளதுவரை கணக்காய்வுக்கு அறியக்கிடைத்திருக்கவில்லை. | நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | எடுக்கப்பட்டுள்ளன. |

### 3.1.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் செயற்திட்டம் மற்றும் கம்பிரெலிய திட்ட நிதியளிப்பின் மூலம் மீளாய்வாண்டின் இறுதியில் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 9.73 மில்லியன் பெறுமதியான 16 வீதி புனரமைப்பு மற்றும் ஏனைய மூலதன வேலைகள் முடிவுறுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டதுடன் அதற்கான காசோலைகளும் கொடுப்பனவுக்காக தயார்ப்படுத்தப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 139 இன் பிரகாரம் முடிவுறுத்தப்பட்ட வேலைகளுக்கு மட்டுமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி விசேட நிகழ்ச்சித்திட்டம் (RIDSP), மீள்குடியேற்றத்திற்கான விசேட செயலணி (TFR) மற்றும் பொருளாதார வலுவூட்டல் மற்றும் சமூக கீழ்கட்டுமான அபிவிருத்தியுடன் தொடர்புடைய இணக்கப்பாட்டு செயற்திட்டம் (REEP) போன்ற செயற்திட்டங்களின் மூலம் நிதியளிப்பு செய்யப்பட்டிருந்த 13 வேலைகள் நாளதுவரை முடிவுறுத்தப்பட்டிராது கூட்டுமொத்தம் ரூபா 8.6 மில்லியன் பெறுமதியான வேலைகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டதாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட கணிய அளவைச்சிட்டைகள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள், வேலை நிறைவேற்றல் அறிக்கைகள் மற்றும் கையளித்தல் கடிதங்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் தயாரிக்கப்பட்டு காசோலைகளும் வரையப்பட்டு பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 138 இன் பிரகாரம் முறையாக சான்றுப்படுத்தப்பட்டிருக்காது கொடுக்கல் வாங்கல்களுக்குரிய காசோலைகள் வரையப்பட்டிருத்தல் தொடர்பில் இறுக்கமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை விருத்தி செய்யப்படுதல் வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

### 3.2 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பெறுகைத்திட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் உள்ளடக்கப்பட்டிராத கூட்டுமொத்தம் ரூபா 642,460 தளபாடம் மற்றும் பொருத்துகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இப் பெறுகைத் திட்டத்தினை மீளாய்வுக்குட்படுத்தி பெறுகை செயற்பாடுகளை வினைத்திறனாக்குவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்டு பெறுகைக்கால அட்டவணைக்கேற்ப பொருட்கள் சேவைகள் கொள்வனவு செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட மின்பிறப்பாக்கி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் கடந்த 03 ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தப்பட்டிராது காணப்பட்ட போதிலும் ரூபா 9.80 மில்லியனிற்கு வேறொரு புதிய மின்பிறப்பாக்கி (502 கிலோவாற்று) 2016 ஆம் ஆண்டு திசெம்பரில் மாவட்டச் செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த இரண்டு மின்பிறப்பாக்கிகளின் நோக்கங்கள், அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்ட மின்பிறப்பாக்கியின் கிரயம் மற்றும் இந்த இயந்திரங்களின் திறன் செயற்படுத்துநரின் விபரம் போன்ற விபரங்கள் கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. எவ்வாறாயினும் மேற்படி புதிய மின்பிறப்பாக்கியானது உரிய பராமரிப்புகளின்றி பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | மின்பிறப்பாக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நோக்கத்திற்காக உபயோகிக்கக்கூடிய வகையில் வினைத்திறன் மிக்க பொறிமுறை ஏற்படுத்தப்பட்டு பயன்படுத்தப்பட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபையின் பரிந்துரைகளுக்கு அமைவாக நிதிப்பிரமாணம் 757 இன் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டிய பின்தொடர் நடவடிக்கைகள் நலிவடைந்திருந்தன. | நிதிப்பிரமாணம் 757 இன் பிரகாரம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

**4. நிலைபேறான அபிவிருத்தி**

**4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் அடைந்துகொள்ளல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் ஐக்கிய நாடுகளிற்கான 2030 நிகழ்ச்சி நிரலிற்கு இணங்கவும் 2017 ஒக்டோபர் 03 ஆந் திகதிய 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகார சட்டத்தை பின்பற்றியும் செயற்பட வேண்டியதுடன் | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் | தவறுகள் எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

| | | |
|---|---|---|
| சுற்றறிக்கைகள் மூலம் மேற்படி விடயம் தொடர்பாக அனைத்து அரசாங்க நிறுவனங்களினாலும் அறிந்து கொள்ளப்பட்டிருந்தன. அதற்கிணங்க அனைத்து அரசாங்க நிறுவனங்களும் உரிய நிறுவனத்தின் அதிகார எல்லையின் கீழ் வருகின்ற தொழிற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறிந்திருக்க வேண்டியபோதிலும் இதன் தொழிற்பாடுகள் தொடர்பான நோக்கங்கள் மற்றும் இலக்குகள் மற்றும் இவ் இலக்குகளை அடைந்து கொள்வதை அளவிடுவதற்கு தேவையான சுட்டிகள் என்பன இனங்காணப்பட்டிருக்கவில்லை. | வேண்டும் | |

## 5. மனித வள முகாமைத்துவம்

### 5.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் உள்ளபடியான பதவியணியினர்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டவாறு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மற்றும் ஆறு பிரதேச செயலகங்களுக்குரிய நான்கு வகையான பதவியணியினருக்குரிய அங்கீகரிக்கப்பட்ட ஆளணி மற்றும் மீளாய்வாண்டில் உள்ளபடியான ஆளணி விபரம் உரியவாறு கிடைத்திருக்காமையால் ஆளணி வேதனங்கள் மற்றும் கடமைப் பங்கீடுகளினை திருப்திகரமாக ஏற்று கணக்காய்வில் பரிசீலிக்க முடியாதுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் விபரங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |